Please check the examination details below before entering your candidate information

Candidate surname	Other names

Centre Number | | | | | |

Candidate Number | | | | |

Pearson Edexcel International GCSE (9–1)

Friday 16 June 2023

Afternoon (Time: 2 hours 30 minutes)

Paper reference **4TA1/01**

Tamil

PAPER 1: Reading, Writing and Translation

You do not need any other materials.

Total Marks

Instructions

- Use **black** ink or ball-point pen.
- **Fill in the boxes** at the top of this page with your name, centre number and candidate number.
- There are **three** sections you must answer:
  – Section A Questions 1–4
  – Section B Questions 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c)
  – Section C Question 7.
- Answer the questions in the spaces provided
  – *there may be more space than you need.*
- You must **not** use a dictionary.

Information

- The total mark for this paper is 100.
- The marks for **each** question are shown in brackets
  – *use this as a guide as to how much time to spend on each question.*

Advice

- Read each question carefully before you start to answer it.
- Check your answers if you have time at the end.

Turn over ▶

©2023 Pearson Education Ltd.
N:1/1/1/1/1

Pearson

SECTION A: READING

Answer ALL questions.

Write your answers in the spaces provided.

Multiple-choice questions must be answered with a cross in a box ☒. If you change your mind about an answer, put a line through the box ☒ and then mark your new answer with a cross ☒. Open-response questions do not have to be written in full sentences and you may respond using single words or phrases.

1 தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி தமிழில் கேள்விகளுக்குரிய சரியான எழுத்தைப் பெட்டியில் இடுக.

தேங்காய்

இந்தியா, ஸ்ரீலங்கா போன்ற வெப்ப மண்டலத் தெற்காசிய நாடுகளில் தேங்காய் உணவுகளில் பொதுவாக உபயோகப்படுத்தப்படுகிறது. அதிலிருந்து வரும் இளநீர் ஒரு புத்துணர்ச்சியூட்டும் பானமாகவும் உட்கொள்ளப்படுகிறது. அது தமிழர்களின் உணவுப் பழக்கத்தின் முக்கிய பகுதியாகும். அத்துடன் சமய விழாக்களிலும் பயன்படுத்தப்படுகிறது. இளநீர் நவீன மருத்துவத்திலும் பயன்படுத்தப்படுகிறது. இது இரண்டாம் உலகப் போரின் போது அவசரக் கால மருந்தாகவும் இது பயன்படுத்தப்பட்டதாகும்.

தென்னை மரத்தின் எல்லாப் பாகங்களும் மிகவும் பயனுள்ளவை. உலர்ந்த தேங்காயாகும் கொப்பரை சமையல், சோப்புகள், ஒப்பனை பொருட்கள், தலைமுடி எண்ணெய், தேய்த்துக் குளிக்கும் எண்ணெய் போன்றவை இவற்றிலிருந்து உற்பத்தியாகும் வேறு சில பொருட்களாகும். கயிறு, பாய்கள், தூரிகைகள், சாக்குகள், மெத்தைகளுக்குத் திணிப்பு, துடைப்பம் வெளிப்புற உறையிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. காய்ந்த இலைகள் கூடைகள் நெய்யப்படவும், படகுகள் கட்டவும் அதன் வேறு சில பாகங்கள் கூரை வேயவும், வேலிகள் அமைக்கவும் பயன்படுகின்றன.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

A தெற்கு	**B** இரண்டாம் உலகப் போரின்	**C** பாய்களும்
D சமையல்	**E** கயிறும்	**F** முதலாம் உலகப் போரின்
G எண்ணெய்	**H** கொப்பரை	**I** மாடிகள்
J படகுகள்	**K** புத்துணர்ச்சியூட்டும்	**L** விளையாட்டு
M வெப்ப மண்டல		

உதாரணம்	தென்னை மரத்திலிருந்து <u>தேங்காய்</u> கிடைக்கிறது
1 (a)	இது இந்தியா, இலங்கை போன்ற .... நாடுகளில் வளர்க்கப்படுகிறது.
1 (b)	உலர்ந்த தேங்காயைக் .... என அழைக்கலாம்
1 (c)	...................., ... வெளிப்புற உறையிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.
1 (d)	காய்ந்த தென்னை மரத்தை .... கட்டவும் பயன்படுத்தலாம்.
1 (e)	இளநீர் ஒரு சிகிச்சையாக .... போது பயன்படுத்தப்பட்டது.
1 (f)	இது ஒரு பிரபலமான .... பானமாகும்

(Total for Question 1 = 6 marks)

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

2 8 சரியான பெட்டிகளில் ஒரு புள்ளடியை ☒ இடுக. சில வாக்கியங்கள் அல்லது நபர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட புள்ளடிகளை இடலாம்.

தன்னார்வ தேவை மனப்பான்மை பற்றிய விவாதம்:

இரத்தினம்:

தன்னார்வ தேவை மனப்பான்மை மக்களுக்கும் சமூகத்திற்கும் முக்கிய உதவி வழங்குகிறது என்று நான் நம்புகிறேன். இது ஒரு தன்னலமற்ற செயலாகும். இதைச் செய்வதால் உங்களுக்கும் உங்கள் சமூகத்திற்கும் நன்மைகள் மேலும் அதிகரிக்கும். இது நண்பர்களைக் கண்டுபிடிக்கவும், சமூகத்துடன் இணையவும், புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளவும், வாழ்க்கையை மேம்படுத்தவும், முன்னேற்றம் அடையவும் உதவக்கூடும்.

தேன்:

தன்னார்வத் தொண்டு உங்கள் மனம், உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க உதவுகிறது. அனைவரும் தன்னார்வலர்களாக இருப்பது என்பது கடினம். இது மன அழுத்தத்தைக் குறைக்கவும், மனச்சோர்வை எதிர்த்துப் போராடவும் திடமான சிந்தனையையும் தரவல்லது. இதற்காக ஒரு நீண்ட கால அர்ப்பணிப்பு அல்லது உங்கள் நாளிலிருந்து ஒரு பெரிய அளவு நேரம் எடுக்க வேண்டும் என்பது அல்ல. தேவைப்படுபவர்களுக்கு எந்த எளிய வழிகளிலும் உதவலாம். இது உங்களின் நல்லாரோக்கியத்திற்கும் உதவுகிறது என நான் நினைக்கிறேன்.

குழலி:

தன்னார்வத் தொண்டு செய்யும் போது நீங்கள் பணம் சம்பாதிக்க மாட்டீர்கள். சில நேரங்களில் நீங்கள் உங்கள் நண்பர்களையும், குடும்பத்தினரையும் விட்டு விட்டு வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டியிருக்கலாம். இதைச் செய்வது விலை உயர்ந்ததாகவும் இருக்கலாம். இதனால் இது அனைவருக்கும் ஏற்றதாக இருக்காது. தன்னார்வத்தொண்டுக்குப் பிறகு உங்களுக்கு வேலை கிடைக்கும் என்பதற்கு உத்தரவாதமும் இல்லை. நீங்கள் இதன் மூலம் நேரத்தை இழக்க நேரிடலாம்.ஆகையால் இதன் பிறகு புதிதாக வேலை தொடங்குவது மிகவும் மனச்சோர்வையும் உண்டாக்கலாம்.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

		இரத்தினம்	தேன்	குழலி
எடுத்துக்காட்டு	தன்னார்வத் தொண்டு என்பது ஊதியம் பெறும் வேலை அல்ல	☐	☐	☒
A	அனைவரும் தன்னார்வலர்களாக இருப்பது கடினம்	☐	☐	☐
B	தன்னார்வத் தொண்டு பயனுள்ள காரணங்களுக்காகச் செய்யப்படுகிறது	☐	☐	☐
C	வெளிநாடு செல்வதற்கு நிறையப் பணம் செலவாகவும்	☐	☐	☐
D	தன்னார்வத் தொண்டு தன்னலமற்ற செயல்	☐	☐	☐
E	இது மனம், உடல் நலத்திற்கு நன்மை பயக்கும்.	☐	☐	☐
F	இது உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது	☐	☐	☐
G	இது உங்களைச் சோர்வடையச் செய்யலாம்	☐	☐	☐

(Total for Question 2 = 8 marks)

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

3 இசைக் கருவி வீணையைப் பற்றிய கட்டுரையைப் படியுங்கள். தமிழில் எண்களால் அல்லது சொற்களால் பதிலளிக்கவும்.

வீணை, ஒரு பழங்கால இசைக் கருவி. வீணைக்கு முன் யாழ் என்ற மற்றொரு பழைமையான கம்பி வாத்தியம் பயன்பாட்டிலிருந்தது. காலப்போக்கில் யாழை விடவும் வீணை மீட்டல் மிகவும் பிரபலமடைந்தது.

செங்குத்து நிலைகளைக் கொண்ட வீணை இன்னும் பழங்கால கோவில் அலங்காரச் சிற்பங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், கிடைமட்ட (horizontal) நிலையில் வீணை வாசித்த முதல் பெரிய கர்நாடக இசைமேதை முத்துசாமி தீட்சிதர் ஆவார். சமய, சமூக அமைப்புகள் வீணை கற்றலை ஊக்குவிக்கின்றன. வெவ்வேறு ராகங்களின் வெவ்வேறு நுணுக்கங்களைக் காட்டும் அதி நவீன கருவிகளில் ஒன்றாக வீணை கருதப்பட்டது.

வீணையில் இசையின் வேகத்தைக் கட்டுப்படுத்தி வாசித்தல் என்பது ஒரு தனித்துவமான பாணியாகும்.சித்ரா வீணை, விசித்திர வீணை, ருத்திர வீணைகள் ஆகியவை தற்காலத்தில் மிகவும் பிரபலமான சில வீணை வகைகளாகும். மேலும் சரஸ்வதி வீணை என்று அழைக்கப்படும் மற்றொரு வகையான வீணை இன்றைய கர்நாடக இசை உலகில் மிகவும் பிரசித்தமாக உள்ளது. கர்நாடக இசை அமைப்பில் உள்ள நுண்ணிய பாணி வீணை நுட்பத்திலிருந்து உருவாகியுள்ளது என்று கூறப்படுகிறது. கடந்த காலங்களில் சிறந்த கர்நாடக இசைக் கலைஞர்கள் அனைவரும் சிறந்த வீணையுடன் சேர்த்து மிருதங்கம், புல்லாங்குழல், வயலின் என்பவற்றையும் வாசிப்பவர்களாகத் திகழ்ந்தனர்.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

(a) வீணை எவ்வகை இசைக்கருவி ஆகும்?

(1)

....

(b) வீணையைக் காட்டிலும் பழையதுமான இசைக் கருவியின் பெயரைக் குறிப்பிடுக

(1)

....

(c) .... நிலைகளைக் கொண்ட வீணை வகையைப் பழங்கால சிற்பங்களில் காணலாம்.

(1)

....

(d) முத்துசாமி தீட்சிதர் எவ்வாறான நிலையில் வீணை வாசித்தார்?

(1)

....

(e) வீணை இன்றும் அதிநவீன கருவியாகக் கருதப்படுவதற்கான இரண்டு காரணங்களை எழுதுக

(2)

....

....

(f) இன்றைய காலத்தின் மிக பிரபலியமான வீணை வகையிலிருந்து ஏதேனும் இரண்டைக் குறிப்பிடுக

(2)

....

....

(g) வீணை கற்றலை எவரெவர் ஊக்குவிக்கின்றனர்

(1)

....

(h) கர்நாடக இசையின் பாணி எதிலிருந்து உருவாக்கப்பட்டது?

(1)

....

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

(i) உங்களுக்குத் தெரிந்த வேறு கர்நாடக இசைக் கருவிகள் இரண்டின் பெயர்களை எழுதுக

(2)

....

....

(Total for Question 3 = 12 marks)

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

BLANK PAGE

4 (a) தினசரி வழக்கத்தின் முக்கியத்துவம் பற்றிப் பின்வரும் பிரித்தெடுத்தலைப் படியுங்கள்.

தினசரி நடைமுறைகள் என்பது முக்கியமான விஷயங்களைச் சரியான நேரத்தில் செய்யப்படுவதாகும். இது நமது மன அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது. வாழ்க்கையின் நிச்சயமற்ற தன்மையையும் நன்றாக நிர்வகிக்கவும் உதவுகிறது. அன்றாடம் செய்யும் பல விஷயங்கள் வழக்கமாக செய்யும் பொழுது எளிதாகி விடும். நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை முடிந்தவரைச் சிறந்த முறையில் செய்ய வேண்டும் என்பதையும் நடைமுறைகள் மூலம் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

இது நேர்மறையான பழக்கங்களை வளர்ப்பதுடன் சுய பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கிறது. வாழ்க்கை பரபரப்பாக மாறும் பொழுது, பயனுள்ள முறையில் காரியங்களைச் செய்வதில் கவனச்சிதறல் ஏற்படாமல் நம்மை வழிநடத்தவும் உதவுகிறது. மேலும், நம் நேரத்தை ஒழுங்குபடுத்தி நம்முடைய நாளுக்கு ஒரு கட்டமைப்பை தினசரி நடைமுறைகள் அளிக்கிறது.

நாம் திட்டமிட்ட அனைத்தையும் வெற்றிகரமான முறையில் சாதிக்கவும் வழிவகுக்கிறது. இது மனம், உடல் இரண்டிலும் ஆரோக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தி, ஒரு அமைதியான தூக்கத்தைத் தருகிறது. இது ஓய்வெடுக்கும் நேரத்தையும், பொழுதுபோக்கிற்கான நேரத்தையும் பெற உதவுகிறது, இதன் விளைவாக மனநலத்தை ஆதரிக்கிறது.

இவை எங்கள் தொடர்ப்பாட்டுச் சாதனங்களில் இருக்கும் புதுமையான பயன்பாடுகளின் உதவியுடன், தினசரி நடைமுறைகளின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இவ்வாறு நாம் ஒரு நடைமுறை வாழ்வைக் கடைப்பிடிக்க சமூக ஊடகங்களும் தொழில்நுட்பமும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

4 (a) (i) தினசரி நடைமுறைகள் நமக்கு அளிக்கும் முக்கியத்துவத்தைக் கூறுக.

(1)

....

(ii) தினசரி நடைமுறைகள், ஒருவரது உடல் நிலையில் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்துகின்றன?

(1)

....

(iii) தினசரி வழக்கத்தின் இரண்டு நன்மைகளை கொடுக்கவும்.

(2)

....

....

(iv) பந்தியில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் இரண்டு நல்ல பழக்கங்களைக் குறிப்பிடுக.

(2)

....

....

(v) தினசரி வழக்கங்கள் இல்லாததால் ஏற்படும் விளைவுகளில் இரண்டைத் தருக.

(2)

....

....

(vi) தினசரி நடைமுறைகளைத் தொழில்நுட்பம் எவ்வாறு ஆதரிக்கிறது?

(1)

....

(vii) சமூக ஊடகங்கள் தினசரி நடைமுறைகளை ஊக்குவிக்கும் வழியைப் பரிந்துரைக்கவும்?

(1)

....

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

4 (b) கலந்துரையாடல்: தூக்கத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய கலந்துரையாடலை வாசிக்க. தமிழில் பதிலளிக்கவும்.

சௌம்யா:

மனித உடல் சரியாகச் செயல்படத் தூக்கம் மிகவும் அவசியமானது. நாம் கடைப்பிடிக்க வேண்டிய தினசரி நடைமுறைகளில் முக்கிய நடைமுறை நேரத்துடன் உறக்கம் கொள்வதாகும். உடல் மற்றும் மனரீதியாக மனித உடலின் ஆரோக்கியத்தை உறுதி செய்வதில் இது மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இது ஒரு ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பராமரிக்க உதவுகிறது. மேலும் பல கொடிய நோய்களிலிருந்து பாதுகாப்பை உறுதி செய்கிறது. நீங்கள் எழுந்திருக்கும் மனநிலை பெரும்பாலும் நீங்கள் இருந்த தூக்கத்தைப் பொறுத்தது எனப் பொதுவாகக் கூறப்படுகிறது. சிறு குழந்தைகளுக்கு தூக்கம் அவர்களின் மனம், உடல் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

சேகர்:

ஒரு நல்ல இரவுத் தூக்கம் மன அழுத்தத்திலிருந்து விடுபடவும், தூக்கமின்மை நமது நினைவாற்றலை பாதிக்கும். தூக்கமானது வேலைக்குச் செல்லும் நபர்களுக்கும் மட்டுமல்ல, எல்லா வயதினருக்கும் மிகவும் அவசியம். இருப்பினும் அனைத்து மனிதர்களுக்கும் தூக்கமின்மை தொடர்புடைய பல சிக்கல்கள் உள்ளன. மனித உடல், விரும்பிய ஓய்வு, தூக்கத்தைப் பெறாத போது பல உடல்நலப் பிரச்சினைகள் எழுகின்றன. வாழ்வில் அதிகம் சாதித்தவர்களின் நடைமுறையில் முக்கிய பழக்கமாக இருப்பதென்பது நேரத்துடன் தேவையான உறக்கம் கொள்வதேயாகும்.

P 7 2 6 9 2 R A 0 1 2 2 4

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

4 (b) (i) சௌம்யாவின் கூற்றுப் படி தூக்கத்தின் இரண்டு நன்மைகளைக் தரவும்

(2)

....

....

(ii) சேகரின் கூற்றுப்படி தூக்கமின்மையின் இரண்டு பக்க விளைவுகளைத் தரவும்

(2)

....

....

(Total for Question 4 = 14 marks)

TOTAL FOR SECTION A = 40 MARKS

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

SECTION B: WRITING

Answer Questions 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c).

Write your answers in the spaces provided.

5 உங்களுக்கு விருப்பமான தொழிலைப் பற்றி 60 முதல் 75 சொற்கள் வரை தமிழில் எழுதுங்கள். நீங்கள் கீழே தரப்பட்டுள்ள எல்லாச் சொற்களையும் பயன்படுத்த வேண்டும்.

எனக்கு விருப்பமான தொழில்

- சிறு வயதில் விரும்பிய தொழில்
- உங்களது தெரிவுக்கான காரணங்கள்.
- இத்தொழிலின் பிரபலமான முன்மாதிரிகள்
- இத்தொழிலின் எதிர்காலம்

(14)

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

(Total for Question 5 = 14 marks)

P 7 2 6 9 2 R A 0 1 5 2 4

Turn over

6 பின்வரும் மூன்று விருப்ப தெரிவில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, தமிழில் சுமார் 75 வார்த்தைகளில் எழுதவேண்டும்.

விருப்பத்தேர்வு 1

(a) உங்களுக்கு மிகவும் கேட்கப் பிடித்த பாடல்களில் பற்றி எழுதுங்கள்

- பாடலின் நினைவுகள்
- பாடல்களைப்பற்றிய உங்கள் கருத்துக்கள்,
- இதுபோன்ற பாடல்களின் எதிர்காலம்

(26)

விருப்பத்தேர்வு 2

(b) உங்கள் உள்ளூர் தலைவருக்கு இப்பகுதியில் உள்ள தன்னார்வ வேலைகள் பற்றி விசாரித்து ஒரு மின்னஞ்சல் அனுப்பவும்

- விண்ணப்பிக்க உங்களின் காரணங்கள்
- உங்களுக்கு விருப்பமான பகுதிகள்
- வருங்காலத்தில் தன்னார்வத் தொண்டு செய்வதன் நன்மைகள்

(26)

விருப்பத்தேர்வு 3

(c) ஆரோக்கியமான உடல்நலத்தைப் பற்றி உங்கள் நண்பருக்கு ஒரு கடிதம் எழுதவும்

- நீங்கள் ஆரோக்கியமாக இருக்கச் செய்த செயற்பாடுகள்
- உங்களின் அறிவுரைகள்
- எதிர்காலத் திட்டங்கள்

(26)

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

P 7 2 6 9 2 R A 0 1 6 2 4

குறியீடு ☒ [எக்ஸ்] குறியிடுவதன் மூலம் நீங்கள் எந்தக் கேள்வியைத் தெரிவு செய்கிறீர்கள் என்பதைக் குறிக்கவும். நீங்கள் உங்கள் மனதை மாற்றினால், குறியீட்டில் குறுக்கு ⊠ வரியை இட்டு, பின்பு புதிய குறியீட்டில் ☒ [எக்ஸ்] குறியிடுவதன் மூலம் உங்கள் புதிய கேள்வியைக் குறிக்கவும்.

Indicate which question you are answering by marking a cross in the box ☒. If you change your mind, put a line through the box ⊠ and then indicate your new question with a cross ☒.

Question 6(a) ☒ **Question 6(b)** ☒ **Question 6(c)** ☒

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

(Total for Question 6 = 26 marks)

TOTAL FOR SECTION B = 40 MARKS

SECTION C: TRANSLATION INTO TAMIL

Write your answer in the space provided.

7 பின்வரும் கட்டுரையைத் **தமிழில்** மொழிபெயர்க்கவும்.

In today's world, technology has become very important. One such type, where people can gain information at their fingertips, is called the internet. People use the internet for multiple purposes, right from texting to social media and for sending official emails, to watching movies and getting medical help. Media has taken advantage of this internet boom and it has penetrated into all fields of life. This has led to people using this visual media for educational as well as entertainment purposes. Good internet speed allows people to experience uninterrupted content without much trouble these days.

(Total for Question 7 = 20 marks)

TOTAL FOR SECTION C = 20 MARKS
TOTAL FOR PAPER = 100 MARKS

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

BLANK PAGE

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

BLANK PAGE

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

BLANK PAGE

BLANK PAGE

Source information

Question 2
gawrav/Getty Images
xavierarnau/Getty Images
ajijchan+/Getty Images

Question 3
© ephotocorp/Alamy Stock Photo

P 7 2 6 9 2 R A 0 2 4 2 4

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA